03.10.2024

O.S.No. 180/2019

வா.சா.4.திரு. விஜயக்குமார், த.பெ.குப்புசாமி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை

1. நான் இந்த வழக்கில் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை பெறப்பட்டு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சிறுதூர் கிராமம் சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவற்றில் கட்டுப்பட்ட சொத்தில் எனது மனைவி டி.வி. வைஷ்ணவி என்பவர் 01.05.1997ம் தேதியில் அயூப்கான் என்ற அம்சத்கான் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார். அய்யனார் என்பவர் இ.எம்.ஜி.சௌந்தரராஜன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்று அந்த சொத்துக்களில் 10 பிளாட்டுகளை பொறுத்து மட்டும் மேற்சொன்ன அயூப்கான் என்ற அம்சத்கான் என்பவருக்கு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்து அந்த பவரின் அடிப்படையில், அதில் ஒரு பிளாட்டை எனது மனைவிக்கு அவர்கள் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். எனது மனைவி கிரையம் பெற்ற இடத்தை வேலி அமைத்து பிரதிவாதி அருண்போத்தி வகையறா மறித்துள்ளார்கள் என்று நில அபகரிப்பு பிரிவில் புகார் கொடுத்து அந்த விசாரணையில் மேற்சொன்ன அருண்போத்தி எனது மனைவி கிரையம் பெற்ற இடத்தை அவரது தந்தை விற்பனை செய்துவிட்டார் என்பதை ஒப்புக் கொண்டு கடிதம் எழுதிக் கொடுத்துள்ளார். அந்த விசாரணையில் எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு நானும், எனது மனைவியும் விசாரணைக்கு ஆஜரானோம். பிரதிவாதி அருண்போத்தி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் 2016ல் ரிட் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த ரிட் மனுவில் சம்மந்தமில்லாத நபர்களில் எதிர்தரப்பாக காண்பித்திருந்ததால் நான் 2022ம் ஆண்டு எனது மனைவியும், அதில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்தேன். அந்த மனுவின் பேரில் மாண்பமை உயர்நீதிமன்றம் நீதிமன்ற ஆணையரை நியமித்து தாவா சொத்து சர்வே செய்யப்பட்டது.

2. அந்த நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் எனது மனைவி கிரையம் பெற்ற இடம் மட்டும் கல் ஊன்றப்பட்டது என குறிப்பிட்டு புகைப்படமும் எடுத்து அதோடு இணைக்கப்பட்டிருந்தது. எனது மனைவி கிரையம் பெற்ற சொத்தானது அய்யனார் என்பவர் இ.எம்.ஜி. சௌந்தரராஜன் என்பவரிடமிருந்து கேரளா மாநிலம் பாற சாலையிலிருந்து பதியப் பெற்ற கிரைய ஆவணத்தில் கட்டுப்பட்ட சொத்து என்பதால், வெளிமாநிலங்களில் பதியப் பெற்ற சொத்தை தமிழ்நாட்டில் பதியப் பெற்றதாக கருதப்படவேண்டும் என்றால் தமிழ்நாட்டில் உள்ள சட்டப்படி மீதமுள்ள முத்திரைக் கட்டணத்தை செலுத்த வேண்டும் என்பதால் அதை அய்யனாரோ, எனது மனைவி கிரையம் கொடுத்த அம்சத்கான் என்பவரோ செய்யவில்லை என்பதால் 2022ல் நான் மேற்படி, முத்திரைக் கட்டணத்தை செலுத்தினேன்.

3. அப்போது, ஒத்தக்கடை மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து பாறசாலை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கடிதம் மூலம் அய்யனார் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் உண்மைத் தன்மையை ஊர்ஜிதம் செய்து அதனடிப்படையில், நான் தாக்கல் செய்த அந்த கிரைய ஆவணத்தின் நகலில் ஒரு முத்திரையிட்டு அசல் ஆவணமாக கருதிக் கொண்டார்கள். சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2ல் கட்டுப்பட்ட எனது மனைவி கிரையம் பெற்ற சொத்திற்கு நான் தற்போது வரை சென்று வருகிறேன். அதற்கு பிரதிவாதி அனுமதி அளித்துள்ளார்.

(குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது)